මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/03-2023
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.08.04

**வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல. : 04/2023**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழக ஆணைக்குழு மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் தலைவர்கள் அனைவருக்கும்

## வரவுசெலவுத்திட்ட அழைப்பு - 2024

## வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் - 2024

### 1. பின்னணி

1.1 2022 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கை முன்னெப்பொழுதுமில்லாத, பேரழிவுமிக்க பாரிய நெருக்கடிக்கு உட்பட்டுள்ளதுடன், இது கடுமையான, நீண்டகால பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விளைவுகளுக்கும் வழிவகுத்தது. நெருக்கடியானது பல்வேறுபட்ட வகையில் முழு சமூகத்தையும் பாதித்துள்ளதுடன் குறிப்பாக வறியோர் மற்றும் பாதிக்கப்பட்டோர் அனைவரும் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி தாக்கங்களுக்கு உட்பட்டனர். ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், நிலையான வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவும் கடினமான கட்டமைப்பு சீர்திருத்தம் இடம்பெற்றபோதும், நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில், அரசாங்கம் நீண்ட கால ஆனால் மிகவும் தேவைப்படும் சீர்திருத்தங்களைச் செயற்படுத்த உறுதியான மற்றும் கவனம் செலுத்திய சீர்திருத்தச் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. இது சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஆதரவுடன், எதிர்கால நோக்குடன் செயற்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, 2022 இல் ஏற்பட்ட நிச்சயமற்ற காலப்பகுதியினை கடுமையாக எதிர்கொண்டு அதனைக் கடந்ததன் மூலம், மேற்குறித்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் மூலம் ஒத்துழைப்பு வழங்கப்பட்டதனால் இலங்கையின் பொருளாதாரம் பல்வேறு பொருளாதார துறைகளில் ஸ்திரதன்மையை அடைந்ததுடன் நெருக்கடியிலிருந்து நீங்கி வளர்ச்சியினை நோக்கி படிப்படியாக நகர்கின்ற ஆரம்ப வெளிப்பாடுகளைக் காட்டியது.

1.2 எவ்வாறாயினும், திட்டமிடப்பட்ட சீர்திருத்தப் பாதையிலிருந்து விலகி, எதிர்காலத்திலும் நிலைபேரற்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்குத் திரும்பு சாத்தியமில்லை. பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவது ஆரம்ப கட்டத்தில் இருப்பதனாலும் நடைமுறையிலுள்ள பாதிப்புகளைக் கருத்திற் கொண்டு அத்தகைய

மாற்றத்தின் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும். எனவே, பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கும், நிறைவேற்றப்படாத பொருளாதார வளர்ச்சி திறனை மீட்டெடுப்பதற்கும், அது தொடர்பான கட்டமைப்புக் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கும் ஒருமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்த செயன்முறை வலுவான அர்ப்பணிப்புடன் கண்டிப்பாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

1.3 அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் முதன்மை இருப்பு உட்பட பல பகுதிகளில் படிப்படியான முன்னேற்றங்கள் காணப்பட்ட போதிலும், நிதி ஆதாரங்களின் பற்றாக்குறை காரணமாக நிதிக்கான பல கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் நிதித் துறை இன்னும் தீவிரமான மற்றும் சிக்கலான நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. எனவே, அரசாங்க செலவினங்கள் கவனமாகவும் திறமையாகவும் நிர்வகிக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும். வரையறுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அத்தியாவசியப் பகுதிகளுக்கு பற்றாக்குறையான வளங்களைச் சேர்ப்பதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டு, செலவினங்களை திறம்பட நிர்வகிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது கட்டாயமாகும். ஒட்டுமொத்தமாக, நாட்டின் பொது நிதிகள் மிகுந்த கவனத்துடனும், ஒழுக்கத்துடனும், பொறுப்புணர்வுடனும் நிர்வகிக்கப்படல் வேண்டும்.

1.4 அதன்படி, நிதி இலக்குகள் மற்றும் அரசாங்கத்தின் நடுத்தர மற்றும் நீண்ட கால கட்டமைப்பு சீர்திருத்த நிகழ்ச்சி நிரல், சர்வதேச நாணய நிதியத்தின் கீழ் நீடிக்கப்பட்ட நிதி வசதி, பேரண்ட பொருளாதார சரிசெய்தல்கள் உட்பட, 2024-2026 நடுத்தர கால கட்டமைப்பிற்குள் 2024 இற்கான வரவு செலவுத்திட்டத்தினை உருவாக்குவதற்கு குறிப்பிட்ட கவனம் செலுத்தப்பட வேண்டும். அது தொடர்பில் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவதே இந்த சுற்றறிக்கையின் நோக்கமாகும். குறிப்பாக, 2024 வரவு செலவுத்திட்டமானது, பொருளாதார மீட்சியைப் பாதுகாப்பதற்கும், முன்னோக்கிச் செல்வதற்கும், உயர்ந்த, பசுமையான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி நாட்டை உந்தித் தள்ளுவதற்காக அறிவிக்கப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களை விரைவாகச் செயற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

## 2. நடுத்தரக் கால பேரண்டப் பொருளாதாரப் போக்கு : 2024-2026

2.1 2048 ஆண்டளவில் உயர் வருமானம் பெறும் நாடாக மாறுவதற்கான நீண்ட கால தூர நோக்கின் அடிப்படையில், 2024-2026 காலப்பகுதியை உள்ளடக்கிய முதல் 5 ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமாகி முற்றாக மீட்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, அனைத்து அரசாங்க நிறுவனங்களும் பொருளாதார சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும். அது மேலும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சியை உறுதி செய்யும் அதே வேளையில் நிலையான மற்றும் உயர் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

2.2 சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நடுத்தர கால பேரண்டப் பொருளாதார இலக்குகளுக்கிணங்க, 2023 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7 சதவீத பற்றாக்குறையாக மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் முதன்மை இருப்பினை 2026 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத மிகையாக மாற்றுவதற்கு 2024 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.8 சதவீத மிகையாக அதிகரிக்க வேண்டியுள்ளது. வருமானத்தினை மேம்படுத்துதல் மற்றும் செலவினங்களைக் குறைத்தல் ஆகிய கொள்கைகளை ஒன்றுசேர்ப்பதன் மூலம் இது அடையப்படல் வேண்டும்.

2.3 பல்வேறு காரணங்களால், 2023 ஆம் ஆண்டு வரையிலான அரசாங்க வருமான செயற்திறன் எதிர்பார்த்த இலக்குகளுக்கு இணங்கவில்லை, இது 2023 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறையை ஏற்படுத்தும். எனவே, வரவுசெலவுத்திட்டத்தின் இலக்கு முதன்மை சமநிலையை அடைய, கடுமையான

செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, செலவினங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத் திட்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி, 2024 ஆம் ஆண்டிற்கான செலவினங்களை மதிப்பிடுவதில் குறிப்பிட்ட கவனம் செலுத்துவதன் மூலம், அரசாங்க செலவினங்களை விவேகத்துடன் நிர்வகிக்க வேண்டும்.

**3. 2024 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல்**

3.1 எப்போதும் செலவுகளின் அடிப்படையிலே பணத்திற்கான மதிப்பு உருவாக்கப்படுவதை உறுதிசெய்யும் அதே நேரம், இதுவரை செலவின நிறுவனங்களால் போதிய கவனத்தைப் பெறாத "குறைந்தபட்ச உள்ளீடுகள் மூலம் மாற்றத்தை ஏற்படுத்துதல்" என்பது 2024 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்க நிறுவனம் ஒவ்வொன்றினதும் பொதுவான இலக்காக இருக்க வேண்டும்.

3.2 அந்த வகையில், பொதுச் சேவைகளை வழங்குவதில் தன்னியக்கமயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல், செலவு-பிரதிபலிப்பு விலை நிர்ணய முறைகளை அறிமுகப்படுத்துதல், வருமான நிர்வாகத்தை திறம்படச் செய்தல் மற்றும் செலவினங்களைக் குறைப்பதற்கான அரசாங்க நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் நிதி ஒருங்கிணைப்புக்கு உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

3.3 பொது முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் குறித்து, பொது-தனியார் கூட்டாண்மையை வலுப்படுத்தல் மற்றும் தனியார் துறையை ஊக்குவித்தல், (வணிக முன்மொழிவுகளை அழைத்தல்), புதுப்பிக்கத்தக்க சக்தியினைப் பயன்படுத்துதல், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய கருத்திட்டங்களை மதிப்பிடுதலில், முதலீட்டு திறன், வேலைவாய்ப்பு உருவாக்கம், ஏற்றுமதிப் பங்களிப்பு, பொருளாதார பங்களிப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றின் அளவுகோல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

3.4 சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மதிப்பீடுகளைத் தயாரிப்பதில், நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல், ஊழலைத் தடுத்தல் மற்றும் ஏற்கனவே தொடங்கப்பட்ட டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களின் விளைவாக இரட்டை நகல் பணிகளைத் தவிர்ப்பதன் மூலம் உருவாக்கப்பட்ட செலவின சேமிப்பு ஆகியவை பிரதிபலிக்கப்படல் வேண்டும். பல்வேறு மானியங்கள், நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி உதவிகளின் கீழ் நலன்களை ஒதுக்கீடு செய்வதில் நலன்புரி நன்மைகள் சபையின் தரவுத்தளத்தை முடிந்தவரை பயன்படுத்த வேண்டும்.

3.5 அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் பொது நிறுவனங்களின் பாதகமான தாக்கத்தை குறைக்க உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். பொது நிறுவனங்களின் பலவீனமான நிதிக் கட்டுப்பாட்டைக் குறைப்பதற்கும், அவற்றின் நிர்வாகத் திறமையின்மைகளை நீக்குவதற்கும், ஏற்கனவே தொடங்கப்பட்ட பொது நிறுவன சீர்திருத்த நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்துவதற்கும் நிதி ஒழுங்கினை வலுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

3.6 அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில், பூச்சிய அடிப்படையிலான வரவுசெலவுத் திட்ட அணுகுமுறையுடன், 10 அமைச்சகங்களின் செலவினங்களை மதிப்பாய்வு செய்வதற்கான 10 பொதுச் செலவின மீளாய்வுக் குழுக்கள் (Public Expenditure Review Committees -PERC) நியமிக்கப்பட்டன, இதற்கு அரசாங்க வரவுசெலவுத் திட்டத்திலிருந்து

அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும். அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும் போது, செலவின மீளாய்வுக் குழுக்களின் பரிந்துரைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சீர்திருத்தங்களை செயற்படுத்துவது குறித்து குறித்த அமைச்சுக்கள் கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3.7 2024 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் பூச்சிய அடிப்படையிலான வரவு செலவுத் திட்ட அணுகுமுறையுடன் மேற்கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதால், வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது அனைத்து செலவு முகவர்களும் பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

i. குறித்த அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட முக்கிய செயற்பாடுகளின் செயற்திறன் தொடர்பான செயற்பாடுகளை மட்டுமே மேற்கொள்வதுடன் பொருத்தமற்ற பணிகளைச் செய்வதிலிருந்து விலகுவதற்கு, அத்தகைய பணிகளை படிப்படியாக பொருத்தமான நிறுவனங்களுக்கு வழங்குதல்.

ii. அமைச்சுக்கள் மூலம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நேரடியாக செயற்படுத்துவதற்குப் பதிலாக அமைச்சின் ஒருங்கிணைப்பின் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

iii. முடிந்தவரை நிறுவனங்களுக்குள்ளும் நிறுவனங்களுக்கு இடையேயும் வளப் பகிர்வு மூலம் செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கான சூழலை உருவாக்குதல்.

iv. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பில் அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சேவை வழங்கும் முகவர்களிடம் ஆலோசனை செய்தல், (உதாரணமாக: மாகாண காணி ஆணையாளர், பிரதேச செயலாளர், இலங்கை மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் போன்றன). குறித்த நிறுவனங்களுடனான கலந்துரையாடல் / முன் ஒப்பந்தம் மூலம் விரைவான அமுலாக்க நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் ஏதேனும் சட்டரீதியான தடைகளை நீக்குதல் தொடர்பான முன் உடன்பாடுகளை எட்டிய பிறகு அந்த நடவடிக்கைகளைத் தொடங்குதல் அவசியமாகும்.

v. குறைந்தபட்சம் அதிக செலவுடைய பாரிய கருத்திட்டங்களின் முடிவுகள் மற்றும் செயற்திறனில் சுயாதீன கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை நடத்துதல் மற்றும் தேவையான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

vi. இரட்டை நகல் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனங்கள் / பிரிவுகளை ஒருங்கிணைத்தல், அல்லது ஒரே மாதிரியான செயற்பாடுகளைச் செய்யவதுடன் இனி தேவைப்படாது என்ற நிறுவனங்களை ஒழித்தல்.

vii. நாட்டின் தற்போதைய நிலைமைகளுடன் பொருந்தக்கூடிய அனைத்து உதவித் திட்டங்களையும் மதிப்பாய்வு செய்தல் மற்றும் இந் நிகழ்ச்சித்திட்டங்களை மறுசீரமைத்தல், இதன் மூலம் அத்தியாவசியப் பயனாளிகளுக்கு மட்டுமே நன்மைகள் வழங்கப்படுவதுடன் அந்த நோக்கத்திற்காக நலன்புரி நன்மைகள் சபையுடன் இணைந்து செயல்படுதல்.

viii. நிறுவன அளவிலான சுய-பணியாளர் மதிப்பாய்வை மேற்கொள்தல், இரட்டை நகல் மற்றும் இனி தேவைப்படாத நிலைகளைக் கொண்ட செயற்பாடுகளினை நீக்குதல், முடிந்தவரை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளுக்கு மட்டுமே பணியாளர்களை ஈடுபடுத்துதல்.

ix. சேவை வழங்கலுக்கான சேவைக் கட்டணங்களைப் புதுப்பித்தல்.

**4.** இதற்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகள் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றித் தயாரிக்கப்பட வேண்டும்.

**4.1 மூலதனச் செலவினம்**

**i. அபிவிருத்திச் செலவினம்**

(அ) 2024 வரவு செலவுத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய அபிவிருத்திச் செலவுகள் தொடர்பாக கோரப்பட்ட தகவல்களை பின்னிணைப்புகள் 1 மற்றும் 2 இலுள்ள வடிவங்களில் வழங்குவது கட்டாயமாகும்.

(ஆ) அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, ஒவ்வொரு உப கருத்திட்டத்தின் கீழும் நிலையான செலவினக் குறியீடுகளின் அடிப்படையில் ஏற்பாடுகள் பிரிக்கப்படல் வேண்டும். உதாரணமாக, கருத்திட்டமொன்றானது கட்டிட நிர்மானம், இயந்திரங்கள் கொள்வனவு, மென்பொருள் அபிவிருத்தி போன்றவற்றைக் கொண்டிருந்தால், தொடர்புடைய உப கருத்திட்டத்தின் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் அந்தந்த நிலையான செலவினக் குறியீட்டின் கீழ் பிரிக்கப்படல் வேண்டும்.

(இ) 2024-2026 நடுத்தர கால வரவு செலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் புதிய கருத்திட்டங்களைத் தொடங்குவதற்கு போதுமான நிதியுதவி கிடைப்பது கடினம் என்பதால் புதிய கருத்திட்டங்களைச் சேர்க்கக்கூடாது.

(ஈ) தற்போது நடைபெற்று வரும் கருத்திட்டங்கள் குறித்து "பாரிய கருத்திட்டங்கள் மீள் வியூகமாக்கல் மற்றும் துரிதப்படுத்தல் குழு (Re-strategizing and Acceleration of Mega Projects Committee -RAMP)" மற்றும் தேசிய தொழிற்பாட்டு அறை (National Operation Room - NOR) ஆகியவற்றின் பரிந்துரைகளையும் அந்த பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் உன்னிப்பாகக் கவனித்தல் வேண்டும்.

(உ) வரவு செலவுத் திட்ட முன்மொழிவாகவோ அல்லது வெளிநாட்டு நிதியுதவியாகவோ ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் காலம் முடிவடைந்த பின்னர், உள்ளூர் நிதியில் தொடரும் கருத்திட்டங்களைத் தொடர்வதற்கான நிதி ஒதுக்கீடு சேர்க்கப்படக்கூடாது.

(ஊ) தனியார் துறை நேரடி முதலீடு அல்லது பொது-தனியார்-கூட்டாண்மைக்குச் சாத்தியமான கருத்திட்டங்களுக்கான வணிக முன்மொழிவுகளை அழைத்தல் ஊக்குவிக்கப்படுகிறது. அந்த வகையில், கருத்திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் செலவினங்களை முடிந்தவரை ஈடுசெய்யும் திறன் கொண்ட வணிக மாதிரிகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

(எ) அரசாங்கத்தால் தொடர்புடைய தனியாருக்குச் செலுத்தப்படும் வருடாந்தக் கொடுப்பனவுகள் மூலம் கருத்திட்டமொன்றின் மொத்தச் செலவைத் தீர்த்தலுக்குட்பட்ட பொது - தனியார் கூட்டாண்மைத் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படக் கூடாது.

(ஏ) அபிவிருத்திக் கருத்திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க சக்திப் பயன்பாடு, நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஒ) அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டுதலின் பேரில் புதிய கருத்திட்டங்கள் தொடங்கப்படும் பட்சத்தில், வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 03/2023 இல் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள வழிமுறையின் கீழ், "தேசிய அபிவிருத்திக் குழு" வின் பரிந்துரைகளுடன் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடுகள் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(ஓ) கடனை திருப்பிச் செலுத்தாத காரணத்தால் நிறுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மீண்டும் தொடங்கப்பட வேண்டியிருப்பதால், கடன் மறுசீரமைப்பு செயன்முறை முடிந்ததும், அத்தகைய கருத்திட்டங்களின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஏற்பாடுகள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் என்பவற்றின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**ii. நிறுவன மூலதனச் செலவினம்**

(அ) தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2021 மூலம் வாகனங்கள் வாங்குவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 2024 ஆம் ஆண்டிலும் நடைமுறையில் இருக்கும்.

(ஆ) புதிய தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கான உதிரிப்பாகங்கள் வாங்குவது 2024 ஆம் ஆண்டிலும் முடிந்தவரை மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(இ) அலுவலக உபகரணங்களான அச்சு இயந்திரங்கள், பொட்டோகொப்பி இயந்திரங்கள், கணினிகள் போன்றவற்றைத் தனித்தனியாகப் / பிரிவுப் பயன்பாட்டிற்கு தனித்தனியாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அத்தகைய உபகரணங்களை ஒன்றிணைத்து, குறைந்தபட்ச உபகரணங்களிலிருந்து அதிகப் பலன் கிடைக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

(ஈ) திரட்டு நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய திறன் மேம்பாட்டு வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக எந்த நிதி ஏற்பாடும் செய்யப்படமாட்டாது. இத்தகைய பயிற்சி தேவைகள் மெய்நிகர் முறைகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் மூலம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

(உ) சேவை பிரமாணக்குறிப்புகள், ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய பயிற்சிகள் தேவைப்பட்டால்

மட்டுமே உள்ளூர் பயிற்சிகளுக்கான நிதி ஏற்பாடு சேர்க்கப்படல் வேண்டும்.

**iii. பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு**

பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான அத்தியாவசிய நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதில் உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். அதன்படி, மூலதன மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, ஏற்கனவே உள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், முறையான பொதுச் சேவைகளைப் பராமரிப்பதற்கும் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

குறிப்பாக, நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள், மருத்துவமனைகள், பாடசாலைகள், முக்கிய அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள், நீர்ப்பாசனங்கள் ஆகியவற்றை முறையாக பராமரிக்கும் திட்டத்தின் கீழ் பராமரிப்பு செய்ய தேவையான ஒதுக்கீடுகளை குறிப்பிட்டு ஒதுக்கீடு செய்வது அவசியம்.

**iv. அதிகபட்ச செயற்திறனுடன் மாகாண சபை பொறிமுறையைப் பயன்படுத்துதல்**

மாகாண சபைகளுக்கு நேரடியாக ஒதுக்கப்படும் பணிகளுக்கு நிரல் அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களின் கீழ் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படக்கூடாது. மாகாண சபை நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களுடன் பிராந்திய மட்டத்தில் நிரல் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களுடன் மேலெழுதப்படுவதைத் தவிர்ப்பதற்காக, மாகாண சபைகளுடன் ஒருங்கிணைந்து செயற்திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

மேலும், மாகாண சபைகளின் கீழ் கணிசமான பணியாளர்களை ஈடுபடுத்தும் ஒரு நிறுவன அமைப்பு இருப்பதால், முடிந்தவரை மாகாண சபைகளின் உடன்படிக்கையுடன் நிரல் அமைச்சுகள் / திணைக்களங்கள் / நிறுவனங்களின் சேவைகளை வழங்குவதற்கு மாகாண சபை கட்டமைப்பைப் பயன்படுத்தல் வேண்டும்.

## 4.2. மீண்டெழும் செலவினம்

மீண்டெழும் செலவினங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**i. சம்பளங்கள், ஊதியம், மேலதிக நேர மற்றும் பிற கொடுப்பனவுகள்**

(அ) 2024 இல் அரசாங்க சேவைக்கு புதிய ஆட்சேர்ப்பு செய்யப்படமாட்டாது. எனவே, அந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படமாட்டாது.

(ஆ) 2024 ஆண்டிற்கான சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் 2023.06.30 இலுள்ள ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு அலுவலருக்கும் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும். அதேசமயம் விவரங்கள் நிறுவன மட்டத்தில் தயாரிக்கப்பட்டு இணைப்பு 3 இலுள்ள வடிவமைப்பின் படி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நோக்கக் குறியீடு 1503 இன் கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் அலுவலர்களின் விவரங்கள் - தனிப்பட்ட

ஊதியங்கள், அந்தந்த நிறுவனங்களுக்கு இந்த வடிவத்தில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### ii. அபிவிருத்தி உதவிகள் மற்றும் நலன்புரி செலவினம்

2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது, பொதுநலத் திட்டங்களைப் பற்றி விரிவாகப் பார்க்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதால், எந்தவொரு சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது அமைச்சரவையின் ஒப்புதலோடும் செயற்படுத்தப்படும் திட்டங்களைத் தவிர நிறுவன மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படும் மானியம் அல்லது நலத்திட்டங்கள் எதுவும் சேர்க்கப்படக்கூடாது.

### iii. புதிய மீண்டெழும் செலவின நோக்கக் குறியீடுகள் மற்றும் விடயக் குறியீடுகள் சிலவற்றை அறிமுகப்படுத்தல்

துப்புரவுச் சேவைகள், பாதுகாப்புச் சேவைகள் மற்றும் மென்பொருள் பராமரிப்புக்கான செலவுகள் என்பன ஒட்டுமொத்த தற்போது குறிப்பிடத்தக்கவை. எனவே, அந்த செலவுகளை வெளிப்படுத்தும் வகையில், பராமரிப்பு செலவு மற்றும் சேவை வகைகளின் கீழ் 3 புதிய நோக்கக் குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மீண்டெழும் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படும் போது, தொடர்புடைய புதிய நோக்கக் குறியீடுகளைப் பயன்படுத்தி செலவினங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

**பராமரிப்புச் செலவினம்**

1304 – மென்பொருள்

**சேவைகள்**

1405 – சுத்திகரிப்பு மற்றும் துப்பவேற்பாடு
1407 – பாதுகாப்புச் சேவைகள்

மேலதிகமாக, அனைத்து நிறுவனங்களும் செலவினத் தலைப்பு 1202-எரிபொருள் மற்றும் செலவினத் தலைப்பு 1203-உணவு மற்றும் சீருடையின் கீழ் பின்வரும் விடயங்களைப் பயன்படுத்தி மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1202 – எரிபொருள்

| | |
|---|---|
| 002 | எரிபொருள் கொடுப்பனவு |
| 009 | குழும வாகணங்களுக்கான எரிபொருள் |
| 010 | ஏனைய நோக்கங்களுக்கான எரிபொருள் |

1203 – உணவு மற்றும் சீருடை

| | |
|---|---|
| 001 | உணவு |
| 002 | சீருடைகள் |

1409 – ஏனைய

| | |
|---|---|
| 138 | இயந்திர மற்றும் அலுவலக உபகரண சேவை உடன்படிக்கை |
| 139 | வாகனக் காப்புறுதி |
| 140 | நானாவித சேவைகள் செலவு |

### 4.3. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

பொது அலுவலர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான மதிப்பீடுகள் பின்னிணைப்பு 4 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வணிக முற்பனக் கணக்குகளை பராமரிக்கும் நிறுவனங்கள், அது தொடர்பான மதிப்பீடுகளை, போதுமான தகவல்களைக் கொண்ட பொருத்தமான படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 4.4 நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பு 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டிற்குள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக, வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மூலம் நிதி ஒதுக்கீடுகள் எவ்வாறு ஏற்பாடுசெய்யப்படுகின்றன என்பதை அடையாளம் காண்பதில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, 2024 வரவுசெலவுத்திட்டத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பது இன்றியமையாததாகிவிட்டது.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் 17 மற்றும் 169 நோக்கங்களின்படி செலவின மதிப்பீடுகளைக் குறியிடுவதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகளைக் கொண்ட வகைப்படுத்தல் வழிகாட்டுதல்களை நிலையான அபிவிருத்தி பேரவை வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்களை நிலையான அபிவிருத்திப் பேரவையின் இணையத்தளமான https://sdc.gov.lk/ இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். அந்த வழிகாட்டுதல்களின்படி, நிலையான அபிவிருத்தி பேரவையின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் இதற்காக ஏற்கனவே உங்கள் நிறுவனங்களில் அடையாளம் காணப்பட்ட அலுவலர்கள் மூலம் அனைத்து வரவுசெலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்திட்டங்களும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் இணைந்ததாகச் சீரமைக்கப்படல் வேண்டும். இவ்வாறு தொகுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத் தகவலின் மென் பிரதியானது, தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு பிரதியுடன் info@sdc.gov.lk என்ற நிலையான அபிவிருத்தி பேரவையின் மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளின் இலக்கம் 05 ஆனது அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாலின சமத்துவம் மற்றும் அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதால், வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்பதில் பாலின அக்கறைக்கு விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

### 4.5. நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கான முன்னுரிமை வரிசை

பின்வரும் முன்னுரிமை வரிசையில் நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும்;

(அ) அத்தியாவசிய பொது சேவைகள் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளை பேணுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள்.

(ஆ) பொறுப்புகள்/அர்ப்பணிப்புக்கள் தொடர்பான கணக்கீடு அல்லது தீர்ப்பனவுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள்.

(இ) ஏறக்குறைய முடிவடையும் நிலையிலுள்ள வேலையை பூரணப்படுத்தல்.

(ஈ) தொடங்கப்பட்ட கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களின் அடுத்த கட்டத்திற்கான நிதி ஏற்பாடுகள்.

I. பகுதியளவு முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் முக்கியமான பணிகளை மட்டும் நிறைவுசெய்து, குறித்த கருத்திட்டங்களை செயற்பட வைத்தல்.

II. இடைநிறுத்த முடிவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக இதுவரை முடிக்கப்பட்ட பணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

III. கருத்திட்டங்களின் அடுத்தக் கட்ட பணிகளை மேற்கொள்தல்.

(எ) வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள், கடன் மறுசீரமைப்புச் செயன்முறையை முடித்தவுடன் மீண்டும் தொடங்கப்பட வேண்டும்.

வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் மூலம் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும் அனைத்து நிறுவனங்களும் இந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**4.6. செலவின மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்**

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு, முறையாகத் தயாரிக்கப்பட்ட அனைத்து பின்னிணைப்புகளையும் 2023 ஆகஸ்ட் 18 அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். செலவின மதிப்பீடுகளுக்காக 2024 EXP_ES பதிப்பு மற்றும் முற்பணக் கணக்கு மதிப்பீடுகளுக்காக 2024 ADV_ES பதிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை (ITMIS) மூலம் மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2024-2026 ஆம் ஆண்டிற்கான நடுத்தர கால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பிற்குள் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் மற்றும் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை உள்ளிடுவது கட்டாயமாகும். இதற்கு மேலதிகமாக, அத்தகைய ஆவணங்களின் பிரதிகள் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ITMIS இல் தரவுகளை உள்ளிடும்போது ஏதேனும் உதவி தேவைப்படின், 011-2484999 என்ற இலக்கத்தினூடாக ITMIS உதவி மைய அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**5. வருவாய் மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்**

வருமான மதிப்பீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்ட தனியான சுற்றறிக்கையினை அரசிறைக் கொள்கைத் திணைக்களம் உரிய காலத்தில் வெளியிடும்.

**6. தெளிவுபடுத்தல்கள்**

மேலும் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின், உங்கள் அமைச்சு / திணைக்களம்/ நிறுவனத்தின் விடயத்திற்குப் பொறுப்பான தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவையின் செயலாளர்
iv. கணக்காய்வாளர் நாயகம்
v. செயலாளர், நிதி ஆணைக்குழு

## பின்னிணைப்பு 01

உப கருத்திட்டங்கள் / மூலதனச் செலவினங்களின் கீழான விடயங்களாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுடன் கூடிய செலவின மதிப்பீடுகளின் விவரங்கள்

**அமைச்சு / திணைக்களம்**

| தொடர் இல. | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடுகளின் செலவின தலைப்பு விபரம் (அ) | அங்கீகாரம் (ஆ) | கருத்திட்டம் தொடங்கப்பட்ட வருடம் | கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வருடம் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் (இ) | 30.07.2023 வரை திரட்டிய செலவினம் | 2023 வருட காலப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட செலவு | 2024 வருடத்தி ற்குத் தேவையான எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடு | 30.07.2023 அன்றுள்ளவாறு திரட்டு முன்னேற்றம் (பௌதிக) | மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | 2025 | 2026 |
| | | | | | | ரூபா மில்லியன் | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

குறிப்புகள்

(அ). புதிய கருத்திட்டமாயின் “புதியது” எனக் குறிப்பிடுக

(ஆ). அமைச்சரவை அங்கீகாரத்துக்கு இல.1, தேசிய திட்டமிடல் திணைக்கள அங்கீகாரத்துக்கு இல. 2, வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கு இல. 3 எனக் குறிப்பிடுக.

(இ). கருத்திட்டத்திற்காக அமைச்சரவையினால் தற்போது அங்கீகரிக்கப்பட்ட மொத்த செலவு மதிப்பீடு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு -2024**

**கருத்திட்ட பொழிப்பு (ஒவ்வொரு அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்)**

1 **செலவினத் தலைப்பு மற்றும் இல.**
2 **உப கருத்திட்ட இல.**
3 **செலவின தலைப்பு விபரம்**
4 **அங்கீகார இயல்பு (குறிப்பு 1 இனைப் பார்க்க)**

5 **கருத்திட்ட நோக்கம்**
(3-5 வரிகளில் குறிப்பிடுக)

6 **செயற்பாட்டு அட்டை (பட்டியல்)**
(செயற்பாடுகளை 5-10 வரிகளில் விபரிக்குக)

1
2
3
4
5

7

| **கருத்திட்ட சுட்டிகள்** | **2022** | **2023** | **2024** | **2025** | **2026** |
|---|---|---|---|---|---|
| செயலாற்றுகை சுட்டிகள் | | | | | |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| | | | | | |
| **கருத்திட்டச் செலவு (ரூபா மில்லியன்)** | **2022** | **2023** | **2024** | **2025** | **2026** |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | |
| ஆளுக்குறிய வேதனாதிகள் | | | | | |
| ஏனைய மீண்டெழும் செலவின இயல்பு | | | | | |
| **மூலதனச் செலவினம்** | | | | | |
| உள்நாட்டு நிதியளிப்பு (குறியீடுகள் 11 மற்றும் 17) | | | | | |
| வெளிநாட்டு நிதியளிப்பு (குறியீடுகள் 12, 13, 14, 15 மற்றும் 16) | | | | | |
| **மொத்தம்** | | | | | |

8 **கருத்திட்ட முகாமைத்துவ அலகின் பதவியணி விபரம்**

| **தொடர் இல.** | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

9 **கருத்திட்ட முகாமைத்துவ பிரிவின் கீழ் வாகனங்கள் பற்றிய விவரங்கள்**

| **வாகன வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| கார் | |
| ஜீப் | |
| டபள்கெப் | |
| வேன் | |
| பேரூந்து | |
| முச்சக்கர வண்டி | |
| மோட்டார் சைக்கிள் | |
| ஏனைய | |

**குறிப்பு:-**

1. தற்போது காலக்கெடு நிர்ணயம் செய்யாமல் வருடாந்த ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்படும் செலவினங்களில், உரிய பணிகளை ஆய்வு செய்து, இலக்கு நிர்ணயம் செய்வதற்கான திகதியை நிர்ணயம் செய்ய வேண்டும்.
2. கருத்திட்டங்களின் மொத்த செலவின்படி, செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அல்லது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் ஒப்புதல் பெறப்படுதல் வேண்டும். இல்லையேல் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அமுல்படுத்தப்பட வேண்டிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவாக அடையாளப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதன்படி, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொடர்புடைய அமைச்சரவை தீர்மானம் மற்றும் / அல்லது கடிதத்தின் திகதி மற்றும் இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில், தொடர்புடைய வருடம் மற்றும் முன்மொழிவு இல. என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

பகுதி (அ)

**2024 இற்கான சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள் (ஒவ்வொரு வ.செ.திட்ட கருத்திட்டத்திற்கும் தனியான படிவங்களை சமர்ப்பித்தல்)**

| இல. | பதவி | பெயர் | சம்பள குறியீடு | நிரந்தர / அமைய | 1001 | 1003 | | | | | | 1202 | 1401 | 1402 | மொத்த மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2024 வருடத்திற்கு சம்பள அதிகரிப்புடன் அடிப்படை சம்பளம் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | ரூபா 5,000/- கொடுப்பனவு | மாதாந்த நிறைவேற்றுத்தர கொடுப்பனவு | மாதாந்த மொழிக் கொடுப்பனவு | மாதாந்த விஷேட இடைக்காலக் கொடுப்பனவு | கொடுப்பனவுகள் (ஒவ்வொரு கொடுப்பனவையும் தனியாக காட்டுக) | மாதாந்தஎரிபொருள் கொடுப்பனவு | மாதாந்த போக்குவரத்துக்கொடுப் பனவு | மாதாந்த தொலைபேசி கொடுப்பனவு | |
| | | | | | (ரூபா) | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | | | | | | | |

பகுதி (ஆ)

**பதவியணி விபரங்கள்**

| | அங்கீகரிக்கப்பட்ட / உண்மையான பதவியணி (2023.06.30 அன்றுள்ளவாறு) | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சு / திணைக்களம்/ நிறுவனம் | சிரேட்ட மட்டம் | | | | மூன்றாம் நிலை | | இரண்டாம் நிலை | | ஆரம்ப நிலை | | ஏனைய | | மொத்தம் | |
| | வகுப்பு I மற்றும் விஷேட தரம் | | வகுப்பு II மற்றும் III | | | | | | | | | | | |
| | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான | அங்கீகரிக்கப்பட்ட | உண்மையான |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

## 2024 வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டுக்கான முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்
## அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

**அமைச்சு / திணைக்களம்/ மாவட்டச் செயலகத்தின் பெயர்:**

**முற்பண பீ கணக்கின் விடய இல.**

| | | | | |
|---|---|---|---|---|
| 2023.06.30 அன்றுள்ளவாறு நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை | | xxx | | |
| 30.06.2023 அன்றுள்ளவாறு ஒப்பந்த மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை | | xxx | | |
| ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை | A | xxx | | |
| | | | | |
| **பண்டிகை மற்றும் விஷேட முற்பணம்** | | | | |
| ஊழியர் ஒருவருக்கு பண்டிகை மற்றும் விஷேட முற்பணம் (10,000+4,000) | | | 14,000 | |
| பண்டிகை மற்றும் விஷேட முற்பணத்துக்கு தேவையான மொத்த ஒதுக்கீடு **(A x 14,000)** | B | | **xxxxx** | |
| | | | | |
| **இடர் கடன்கள்** | | | | |
| சிரேட்ட / மூன்றாம் நிலை/ இரண்டாம் நிலை ஊழியர்களின் எண்ணிக்கை | C | | xxxx | |
| சிரேட்ட /3ம் நிலை/ 2ம் நிலை ஊழியருக்கான இடர் கடன் | | | 250,000 | |
| | | | | |
| சிரேட்ட /3ம் நிலை/ 2ம் நிலை ஊழியருக்கான இடர் கடனுக்கான மொத்த ஒதுக்கீடு **( C x 250,000)** | D | | **xxxxx** | |
| | | | | |
| ஆரம்ப நிலை ஊழியர்களுக்கான மாதாந்த மொத்த அடிப்படை சம்பளம் | E | | xxxx | |
| ஆரம்ப நிலை ஊழியர்களுக்கான மொத்த ஒதுக்கீடு **( E x 10)** | F | | **xxxxx** | |
| | | | | |
| தேவையான மொத்த ஒதுக்கீடு **( B+D+F)** | | | | xxxxxxx |
| 30.06.2023 இறுதியில் முற்பண "பி" கணக்கு தற்போதய மீதி | | | | (xxxxxx) |
| 30.06.2023 அன்று முற்பண "பி" கணக்கில் எஞ்சிய ஏற்பாடுகள் | | | | (xxxxxx) |
| கடன்கள் மற்றும் முற்பணங்களைச் செலுத்துவதற்கு தேவையான மீதி தொகை | G | | | xxxxxxx |
| | | | | |
| | | | | **பரிந்துரைக்கப் பட்ட தொகை** |
| **2024 இற்கு தேவையான ஆகக்கூடிய செலவின வரையறை** | G | | **xxxxxx** | **xxxx** |
| | | | | |
| 01.01.2023 – 30.06.2023 காலப்பகுதிக்கான மொத்தப் பெறுகை | | | xxxx | |
| மாதத்துக்கான சராசரிப் பெறுகை | | | xx | |
| வருடத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட பெறுகை 2023 | | | xxxx | |
| | | | | |
| **2024 இற்கு தேவையான ஆகக் குறைந்த பெறுகை வரையறை** | | | | **xxxx** |
| | | | | |
| 01.01.2023 அன்றுள்ளவாறு முற்பண "பி" கணக்கு மீதி | | | xxxxx | |
| 2023 வருடத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவினம் | | | xxxx | |
| 2023 வருடத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த பெறுகைகள் | | | (xxxxxxx) | |
| 31.12.2023 அன்றுள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட மீதி | | | xxxxxxx | |
| | | | | |
| 2024 இற்கு தேவையான மொத்த செலவினம் | | | xxxxxxx | |
| 2024 இற்கு தேவையான மொத்த பெறுகைகள் | | | (xxxxxxx) | |
| **2024 பற்று மீதிக்கு தேவையான ஆகக்கூடிய வரையறை** | | | **xxxxxxx** | **xxxxxx** |

திகதி: .........................                                        ..........................................

ஒப்பம்

திணைக்களத் தலைவர்